வெளியீடு எ. 32

99

உ

குருபாதம்

# நவராத்திரி




OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 OCT 1954

"வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள்."

தருமபுர ஆதீனம்

1954

223569

உ

குருபாதம்

# நவராத்திரி

சிவாகம வித்துவான்,
**சிவஸ்ரீ S. சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள்,**
தலைமையாசிரியர் வேதசிவாகம பாடசாலை தருமபுரம்.

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றிக் கவுணியர்க்குப்
பால் சுரந்த கலசம் போற்றி
இரும்புமனம் குழைத்தென்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பிராட்டி
அரும்புமிள நகை போற்றி ஆரணநூ
புரஞ்சிலம்பும் அடிகள் போற்றி.

(திருவிளையாடற்புராணம்)

இஃது புரட்டாசிமீ வளர்பிறை பிரதமை முதல் நவமி வரையில் ஒன்பது நாளும் அனுஷ்டிக்கப்படும் விரதம். இதற்கு சாரதா நவராத்திரி என்று பெயர்.

223569

## முறை

நவராத்திரிக்கு வேண்டிய பூஜோபகரணங்களை அமாவாசையன்றே சேகரித்துக்கொண்டு அன்று ஏககால போஜனம் செய்து பிரதமையில் சுபகரமாய் அலங்காரம் செய்யப்பட்ட வேதிகை அமைத்து தேவியின் பூஜாவிதி தெரிந்த அந்தணர்களில் ஒன்பதின்மர், ஐவர், மூவர், அல்லது ஒருவரையாவது ஒன்பது தினங்களுக்கும் வரணம் செய்து பூஜாமண்டபத்தை அடையச் செய்யவேண்டும். மந்திர பூர்வகமாய் வெண்பட்டுவிரித்த சிம்மாசனத்தில் சதுர்புஜம்,

**முதல் நாள்:** மது, கைடபன் என்ற இரண்டு அசுரர்களை ஸம்ஹாரம் செய்த மஹாவிஷ்ணுவிற்கு உத்போதக சக்தியாக இருந்த காரணத்தால் முதல் திருநாளுக்கு நவ துர்க்கையினுள் குமாரி என்ற துர்க்கைபூஜிக்கப்படுவதால் அபயம், வரதம், புத்தகம், அக்ஷமாலையுடன் கூடிய பாலையின் வடிவம் அலங்கரிக்கப்படுவது சிறந்தது.

**இரண்டாம் நாள்:** மகிஷாசுர சைன்யங்களை வதம் செய்யும் தோற்றம். அன்று திருமூர்த்தி என்ற துர்க்கை பூஜிக்கப்படுவதால் கரும்பு வில், புஷ்பபாணம், பாசாங்குசம் இவைகளுடன் கூடிய ராஜராஜேச்வரியின் வடிவம் அலங்கரிக்கப்படுவது சிறந்தது.

**மூன்றும் நாள்:** மஹிஷாஸுரவதம் என்ற தோற்றம். அன்று கல்யாணி என்ற துர்க்கை பூஜிக்கப்படுவதால் சூலத்தைக் கையிலேந்தி மஹிஷத்தின் தலைமீது வீற்றிருக்கும் வடிவம் அலங்கரிக்கப்படுவது சிறந்தது.

**நான்காம் நாள்:** இடையூறு நீங்கிய இந்திரன் முதலானவர்களுடைய துதியின் தோற்றம். அன்று ரோஹிணி என்ற துர்க்கை பூஜிக்கப்படுவதால் சிம்மாசனத்தில் அமர்ந்து, தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் அநுக்கிரஹம் செய்யும் ஜய துர்க்கையின் வடிவம் அலங்கரிக்கப்படுவது சிறந்தது.

**ஐந்தாம் நாள்:** சுக்ரீவன் என்ற தூதனுடன் சம்வாதத் தோற்றம். அன்று காளி என்ற துர்க்கை பூஜிக்கப்படுவதால் சும்பன் என்ற அசுரனுடைய தூதன் தூது சொல்வதைக் கேட்டுக்கொண்டு சுகாசனத்தில் வீற்றிருக்கும் வடிவம் அலங்கரிக்கப்படுவது சிறந்தது.

**ஆறும் நாள்:** தூம்ரலோசனவதம் என்ற தோற்றம். அன்று சண்டிகை என்ற துர்க்கை பூஜிக்கப்படுவதால் ஸர்ப்பராஜாஸனத்தில் அமர்ந்து அக்ஷமாலை, கபாலம், தாமரைப்பூ, பொற்கலசம் இவைகளுடன் கூடிய திருக்கரங்களோடு பிறையணிந்தவளாய் விளங்கும் வடிவம் அலங்கரிக்கப்படுவது சிறந்தது.

**ஏழாம் நாள்:** சண்டமுண்டன் என்ற இரண்டு அசுரனுடைய வதத்தோற்றம். அன்று சாம்பவி என்ற துர்க்கை பூஜிக்கப்படுவதால் பொற்பீடத்தில் அமர்ந்துகொண்டு ஒருகாலை கீழிருக்கும் தாமரையில் ஊன்றி வீணைவாசிக்கும் வடிவம் அலங்கரிக்கப்படுவது சிறந்தது.

**எட்டாம் நாள்:** ரக்தபீஜன்வதத் தோற்றம். அன்று துர்க்கை என்ற துர்க்கை பூஜிக்கப்படுவதால் அணிமா முதலிய அஷ்ட சக்திகள் புடைசூழ பாசாங்குசம், அபயம், கரும்பு வில்லுடன் கருணைநிறைந்த தோற்றத்துடன் வீற்றிருக்கும் வடிவம் அலங்கரிக்கப்படுவது சிறந்தது.

**ஒன்பதாம் நாள்:** சும்பநிசும்பவதத் தோற்றம். அன்று சுபத்ரை என்ற துர்க்கை பூஜிக்கப்படுவதால் வில், பாணம், அங்குசம், சூலம் இவைகளை தரித்த கையோடு சிவசக்தி வடிவமாய் காமேச்வரியின் வடிவம் அலங்கரிக்கப் படுவது சிறந்தது.

## நவராத்திரியின் தத்துவம்

या सा शक्तिर्जगद्धातुः कथिता समवायिनी ।
इच्छात्वं तस्य सा देवी सिसृक्षोः प्रतिपद्यते ॥
सैकापि सत्यनेकत्वं यथा गच्छति तच्छृणु ।
एवमेतदिति ज्ञेयं नान्यथेति सुनिश्चितम् ॥
ज्ञापयन्ती जगत्यत्र ज्ञानशक्तिर्निगद्यते ।
एवं भूतमिदं वस्तु भवत्विति यदा पुनः ॥
जाता तदैव तत्तद्वत्कुर्वन्त्यत्र क्रियोच्यते ।

மாலினிவிஜயம்.

மகாசம்காரகாலத்தின் முடிவில் இறைவன் உலகத்தை சிருஷ்டிக்கவேண்டுமென இச்சிக்கிறான். அப்போது இச்சை என்ற சக்தி தோன்றுகிறது. பின் அதை எவ்வாறு சிருஷ்டிப்பது என்பதை அறிகிறான். அப்போது ஞானசக்தி

அஷ்டபுஜம், அஷ்டாதசபுஜம் கூடிய ஏதாவது ஒரு துர்க்கா தேவியை எழுந்தருளச்செய்து வஸ்திராபரணங்களால் அலங்கரிக்கவேண்டும்.

கும்பபூஜைக்காக கலசஸ்தாபனம் செய்து மங்கள வாத்யத்துடன் கணபதி, ஆசார்யன், தேவி முதலியவர்களை பிரார்த்தனை செய்துகொண்டு கும்பத்திற்கும் பிம்பத்திற்கும் நவாவரணபூஜைசெய்து சுகந்தமான அர்க்யம் கொடுத்து இளநீர், மாதுளை, வாழை, பலா, மா முதலிய கனிகளை மிகுதியாக வைத்து அன்னநிவேதனமும் செய்யவேண்டும். நவராத்திரி பூஜையை பலவித திரவியங்களாலும் நிருத்த கீத வாத்யங்களோடும் பக்திசிரத்தையோடும் செய்யவேண்டும்.

ஒன்பதுநாளும் விரதமிருப்போர் உபவாஸம் இருந்து பூஜைக்குப்பிறகு புசித்து சயனாதிகளை விலக்கி நிலமிசை படுத்தல்வேண்டும். பிரதமை ஹஸ்தநக்ஷத்திரம் கூடுமாயின் அது விசேஷ தினமாகும். அத்தினத்தின் பூஜையால் அம்பிகை விசேஷமாக ஸர்வாபீஷ்டங்களையும் கொடுக்கிறாள்.

கலசபூஜை ஹோமம் வரையில் செய்யத்தகுந்தனவற்றை முடித்துப் பின்னர் கன்னிகைகளை பூஜிக்கவேண்டும். அக்கன்னிகைகளை இரண்டுமுதல் பத்துவயதிற்குட்பட்டவர்களாய் நோயற்றவர்களாய் லக்ஷணமுள ்ளவர்களாய் தேர்ந்தெடுத்து முறையே குமாரி, திருமூர்த்தி. கல்யாணி, ரோஹிணீ, காளிகா, சண்டிகா, சாம்பவி, துர்க்கா, சுபத்ரா என்ற பெயர்களால் பூஜிக்கவேண்டும்.

பத்துவயதிற்கு மேற்பட்ட கன்னிகைகள் பூஜைக்குத் தகுதியற்றவர்கள். முதல்நாள் ஒரு கன்னிகையையும் இரண்டாம்நாள் இருகன்னிகைகளையும் இம்மாதிரி நாளொன்றுக்கு ஒவ்வொரு கன்னிகையாக உயர்த்திப்பூஜிக்கவேண்டு நாளொன்றுக்கு ஒவ்வொரு கன்னிகையாகவும் பூஜிக்கலா இப்பூஜை தனத்திற்கேற்ப விசேஷமாக செய்யத்தக்கதன்று லோபமாகச் செய்யக்கூடாது.

## கன்னிகா பூஜையின் பலன்

1. குமாரியை பூஜிப்பதால் தரித்ரநாசம், சத்துருக்ஷயம், ஆயுள்விருத்தி.

2. திருமூர்த்தியை „ தர்மார்த்தகாமம், தனதான்ய விருத்தி, புத்ராபிவிருத்தி.

3. கல்யாணியை „ வித்தை, ஜயம், ராஜ்யசுகம்.

4. ரோஹிணியை „ ரோகநாசம்.

5. காளியை „ சத்ருநாசம்

6. சண்டிகையை „ ஐச்வர்யம்.

7. சாம்பவியை „ யுத்தஜயம், துக்கநிவர்த்தி ராஜசம்பத்து.

8. துர்க்கையை „ சத்ருநாசம், செய்யமுடியாத காரியங்களைச் செய்யும் ஆற்றல், பரலோக சுகம்.

9. சுபத்திரையை „ மனோரதசித்தி.

என்ற இவைகள் கைகூடும்.

நவராத்திரி விரதத்தை எண்ணிறந்த தேவர்கள் அனுஷ்டித்து இஷ்டசித்திகளை அடைந்துள்ளார்கள். சுரதன் என்ற அரசனும் சமாதி என்ற வைச்யனும் தேவியையுபாசித்து இஷ்ட சித்தியைப் பெற்றனர்.

## நவராத்திரியில் தேவியை அலங்கரிக்கும் முறை

முதல் மூன்று நாட்களில் ருத்ர துர்க்கையும், நடு மூன்று நாட்களில் லக்ஷ்மீ துர்க்கையும், கடைசி மூன்று நாட்களில் ஸரஸ்வதி துர்க்கையும் பூஜிக்கப்படுகிறார்கள்.

தோன்றுகிறது. பின் இச்சாசக்தியினுல் உலகைப் படைக்கிருன். இக்கருத்தே இந்த நவராத்திரி உற்சவத்தால் விளக்கப்படுகிறது. தேவர்களுக்கு இரவுகாலம் தக்ஷிணுயனம். இரவு என்பது உறக்கத்திற்குரிய காலம். இது சம்காரகாலம் போன்றது. இவ்விரவின் மத்தியகாலமாகிய இந்த நவராத்திரியில் இச்சாசக்தியின் தோற்றமாகிய துர்க்கையின் ஆட்சிகாலம் முதல் மூன்று நாட்கள். இதில் இறைவன் உலகத்தை உஜ்ஜீவிக்க விரும்புகிருன்.

நடுவிலுள்ள மூன்றுநாள் ஞானசக்தியின் தோற்றமான லக்ஷ்மீதுர்க்கையின் ஆட்சிகாலம். இதில் இறைவன் ஆன்மாக்களுக்கு தனுகரணபுவனபோகங்களைக் கொடுக்கும் முறையை அறிகிருன்.

இறுதி மூன்றுநாள் கிரியாசக்தியின் தோற்றமான சரஸ்வதி துர்க்கையின் ஆட்சிக் காலம். இதில் இறைவன் முன் அறிந்தவாறு அருள்வழங்குகிருன் என்பது சிவாகம சித்தாந்தத்தின் உள்ளுறை.

### மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ்

சொற்கொடியோடு மலர்க்கொடி கொய்து
தொடுத்த விரைத்தொடையும்
சுந்தரி திட்டிய சிந்துர மும்மிரு
துங்கக் கொங்கைகளின்

விற்கொடி கோட்டிய குங்கும முங்குடை
வெள்ளங் கொள்ளைகொள
வெளியே கண்டுநின் வடிவழ கையன்
விழிக்கு விருந்துசெய

இற்கொடி யோடு கயற்கொடி வீரன்
எடுத்த கருப்புவிலும்
இந்திர தனுவும் வணங்க வணங்கும்
இணைப்புரு வக்கொடிசேர்

பொற்கொடி யிமய மடக்கொடி வைகைப்
புதுநீ ராடுகவே
பொருநைத் துறையொடு குமரித் துறையவள்
புதுநீ ராடுகவே.

பண்ணூறு கிளிமொழிப் பாவைநின் றிருமேனி
பாசொளி விரிப்பவந்தண்
பவளக் கொடிக்காமர் பச்சிளங் கொடியதாய்ப்
பருமுத்த மரகதமதாய்த்

தண்ணூறு மல்லற் றுறைச்சிறை யனங்களி
தழைக்குங் கலாமஞ்ஞையாய்ச்
சகலமு நின்றிருச் சொருபமென் றேலிடும்
சதுர்மறைப் பொருள் வெளியிடக்

கண்ணூறு குழலியர் குடக்கொங்கை பொங்குசெங்
களபமுங் கத்தூரியும்
கப்புரமு மொக்கக் கரைத்தோடி வாணியும்
காளிந்தி யுங்கங்கையாம்

விண்ணூறு மளவளாய் விளையாடு புதுவைகை
வெள்ளநீ ராடியருளே
விடைக்கொடி யவர்க்கொரு கயற்கொடி கொடுத்தகொடி
வெள்ளநீ ராடியருளே.

—குமரகுருபரர்.

Q25
N54

## அபிராமி அந்தாதி

சென்னிய துன்பொற் றிருவடித் தாமரை சிந்தையுள்ளே
ன்னிய துன்றிரு மந்திரஞ் சிந்துர வண்ணப்பெண்ணே
ன்னிய நின்னடி யாருடன் கூடி முறைமுறையே
னிய தென்றுமுன் றன்பர மாகம பத்ததியே.

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வவடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாளபிராமி கடைக்கண்களே.

—அபிராமி பட்டர்.

223569

சுபம்.

ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம்.